செ.வெ.எண் : 293 நாள் : 24.05.2011

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக வரவேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டதன் காரணமாக இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுகா, தொண்டியைச் சேர்ந்த திருமதி கே.சரிதா அவர்கள், தேனி மாவட்டம் வீரபாண்டியில் உள்ள அருள்மிகு கௌரியம்மன் திருக்கோயிலில் 13.5.2011 அன்று தனது நாக்கை அறுத்து நேர்த்திக் கடன் செலுத்தியுள்ளார். இவருக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். மேலும், இவர் கணவனால் கைவிடப்பட்டு ஏழ்மை நிலையில் வாழ்ந்து வருகிறார்.

இவர் தனது நாக்கை அறுத்து நேர்த்திக் கடன் செலுத்தியதை அறிந்ததும், ஆண்டிப்பட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு முதலுதவியும், அதனைத் தொடர்ந்து மதுரை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சையும் அளிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்த நிகழ்வு குறித்து அறிந்ததும், பாதிக்கப்பட்ட திருமதி கே. சரிதா அவர்களை உடனடியாக சென்னைக்கு வரவழைத்து அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதித்து அறுவை சிகிச்சை செய்ய உத்தரவிட்டிருந்தார்கள். இதன்படி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த திருமதி கே. சரிதாவுக்கு தேவையான அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு குணமடைந்த பின்னர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

திருமதி சரிதா அவர்கள் கணவனால் கைவிடப்பட்ட நிலையில், அவரின் ஏழ்மையான குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (24.5.2011) தலைமைச் செயலகத்தில் திருமதி சரிதா அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையில்,

சத்துணவுத் துறையில் சத்துணவு உதவியாளர் வேலைக்கான பணி நியமன ஆணையை வழங்கினார்கள். இதன் மூலம் திருமதி சரிதா மாத ஊதியமாக ரூ.2077/ - பெறுவார்.

மேலும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அறக்கட்டளையின் மூலம், சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் திருமதி சரிதாவின் சிகிச்சைக்கான முழுக்கட்டணத் தொகை **36,195/-** ரூபாய் செலுத்தவும் உத்தரவிட்டார்கள். மேலும், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அறக்கட்டளை மூலம் அவருக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கினார்கள். இதைத் தவிர, அவர் வசிப்பதற்கு சொந்த கிராமமான தொண்டியில் வாடகை வீடு ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான மாத வாடகையை புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அறக்கட்டளையின் மூலம் தொடர்ந்து வழங்கிடவும் ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் பணி ஆணையையும், நிதி உதவியையும் பெற்றுக் கொண்ட திருமதி சரிதா அவர்கள், தான் நாக்கை அறுத்து நேர்த்திக் கடன் செலுத்தியதை அறிந்ததும் உடனடியாக மேல் சிகிக்சைக்காக அப்பலோ மருத்துவமனையில் அனுமதித்து தனக்குத் தேவையான சிகிச்சையை அளித்ததற்கும், சத்துணவு உதவியாளர் பணி மற்றும் நிதி உதவிகளையும் வழங்கியதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : **24.5.2011**